# வேள்பாரி புதினத்தில் அகுதை இனம்

*ம. இந்துஜா பிருந்தா*
முனைவர் பட்ட ஆய்வாளர்

*முனைவர். தா. ஷமிலா ஜோஸ்டர்*
தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6455

***முன்னுரை***

*சங்க இலக்கியத்தில் நிலவுடைமை சமுதாய உருவாக்கம் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு நிலவுடைமைச் சமுதாயம் தோன்றுவதால் பல இனக்குழுச் சமுதாயங்கள் அழிவினை ஏற்கவேண்டியுள்ளது. வேள்பாரி புதினத்திலும், மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பல்வேறு இனங்களின் மிச்சங்கள் பறம்பு நாட்டில் வசிப்பதாக புனைவுகளுடன் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அழிக்கப்பட்ட இனங்களில் ஒன்றாக அகுதை இனம் வேள்பாரி புதினத்தில் சித்தரிக்கப்பட்டு, அகுதைப் பற்றியும், அகுதையின் இனம் பற்றியும் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவற்றோடு சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள அகுதை பற்றிய செய்திகளை ஒப்பிடுவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.*

**அகுதையின் குலக்கதை**

சங்க இலக்கியத்தில் குறுநில மன்னனாக குறிப்பிடப்பட்டுள்ள அகுதை வேள்பாரி புதினத்தில் கூடல்நகரை உருவாக்கிய ஒரு இனக்குழுத் தலைவனாக கூறப்பட்டுள்ளான். அகுதையும், அவனது இனத்தினரும் விவசாயத்தின் ஆதிநுட்பங்களை அறிந்தவர்களாக வைகைக் கரையின் கூடல்நகரில் வாழ்ந்துவந்தனர். உப்புவிற்கும் உமணர்கள் நிலமெங்கும் இருக்கும் மக்களையும், அவர்களின் வாழ்வியலையும் அறிந்திருந்ததால், அகுதை இனத்தின் வளமையையும் நன்கு அறிந்திருந்தனர். உமணர்களின் வழி, அகுதையின் செழிப்பை அறிந்த கொற்கைப்பாண்டியன் அதன்வழியாகவே அகுதை இனத்தினை அழிப்பதற்கான நாளினையும் முடிவு செய்தான். வைகையில் புனலாட்டு விழாவில் கூடல்வாசிகள் நீராடி மகிழ்ந்திருக்கும்போது, கொற்கைப்பாண்டியன் தன்னுடைய படையை நுழைத்து, அகுதையையும் அவனது இனத்தினரையும் அழித்தான். அந்த எதிர்பாராத தாக்குதலின் போது அகுதையின் மனைவி எதிரிகளின் கண்ணிற்படாமல் தப்பித்து தன் குழந்தையோடு பறம்பு நாட்டிற்குள் நுழைந்திருக்கிறாள். தற்பொழுது அகுதையின் வழித்தோன்றல் நீலன் என்னும் “பறம்பின் திசைக்காவல் வீரன” என்று புதினத்தின் கதை நகர்கிறது. சங்க இலக்கியத்திலும் கூடல்நகரை ஆட்சிபுரிந்த அகுதையை பாண்டிய மன்னன் அழித்ததாகவே கூறப்பட்டுள்ளது.

**விவசாய அறிவுச்சேகரம்**

குறிஞ்சி, முல்லை நிலங்களின் உணவு தேடல் முறைக்கு மாற்றாக கால்பரப்பு நிலத்திற்குள் உணவை விளைவிக்கமுடியும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக சங்க காலத்தில் விவசாயம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். "காடுகளிலும் மலைகளிலும் காய்களையும் கனிகளையும் தின்று வாழ்ந்த மனிதன் சிந்திக்கத் தொடங்கிய பிறகு உணவுத் தானியங்களை இனங்கண்டு அதனைச் சமநிலப்பகுதிகளில் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்கினான்."[1] இப்பகுதி மேற்கண்ட கருத்தினை மெய்ப்பிப்பதாக உள்ளது. சங்க காலத்தை பிரதிபலிக்கும் வேள்பாரி புதினத்தில் அகுதையின் கூடல்நகர் வேளாண்மை நடைபெறும் மருத நிலமாகவே கூறப் பட்டுள்ளது. அகுதை இனத்தினர் இயற்கையைத் தமது ஆற்றலுடன் பயன்படுத்திக்கொள்ள அறிந்தவர்களாக காட்டைத் திருத்தி கழனியாக்கினர். மேலும் மண்ணின் தன்மைகளை அறிந்து மண் ஏற்றுக்கொள்ளும் தாவரங்களை பயிரிட்டு அறுவடை செய்தனர். கொற்றவை கூத்தில், மூத்த பாணன் தனது பாடல் வழியாகவே அகுதையின் கதையை குறிப்பிட்டு, அகுதை இனத்தினர் விவசாய அறிவு மிக்கவர்கள் என்றும் கூறுகிறான்.

**"தாவரங்களின் வேர்களை எந்த மண் தனது மார்போடு**
**உள்வாங்கி அணைத்துக்கொள்ளும், எந்த மண் தலையில்**
**முட்டி வலி தள்ளும் என அவர்கள் கண்டறிந்தனர்"[2]**

அகுதை இனத்தினர் விவசாயத்தின் முன்னோடிகளாக வேள்பாரி புதினத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததை இவ்வரிகள் விவரிக்கின்றன.

சங்ககாலத்தில் ஆட்சிபுரியும் எல்லைகளின் விரிவாக்கமே அரசின் அடிப்படை நோக்கமாக இருந்தது. இதனால் நால்வகை நிலங்களும் அரசின் உள்ளடங்குகின்றன. அவற்றுள் மருத நிலம் என்பது வேளாண்மையால் பொருளாதாரத்தை ஏற்படுத்தியது.

**"பால்பெய் செந்நெல் பாசவல் பகுக்கும்**
**புனல்பொரு புதவின் உறந்தை"[3]**

என்ற அகநானூற்றுப் பாடல் மருத நிலத்தில் நடைபெற்ற நெல் விவசாயத்தினை அழகுற புலப்படுத்துகிறது.

**உழுபடைகள்**

வேளாண் முறைகள் அறிமுகமாகி, மாற்றம் பெற தொடங்கிய பின்பு, உழுபடைகள் முக்கியமான உழவுக்கருவியாக பயன்படுத்தப்பட்டது. இதற்கு ஏர், கலப்பை, நாஞ்சில் என்ற வேறு பெயர்களும் உண்டு வேள்பாரி புதினத்தில் அகுதை இனத்தினர் நிலத்தை உழுவதற்கு பலவகை மரங்களாலான உழுபடைகளை உருவாக்கி பயன்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. பன்றி அகழ்ந்தடுத்த நிலத்தில் பயிர்களை விளைவித்த குறிஞ்சி நிலத்தினரின் அனுபவத்தை அகுதை இனத்தினர் அறிந்து நிலத்தை உழுவதற்காக உழுபடைகளை உருவாக்கினர். கபிலர் பாரியிடம் அகுதையின் இனத்தினரைப் பற்றிக்கூறும் போது, அவர்கள் உழுபடைகளை பல அளவுகளிலும், பலவகைகளிலும் உருவாக்கியிருந்ததையும் கூறுகிறார்.

**"வண்டல் மண்ணுக்கு, இறுகிய மண்ணுக்கு, இளமண்ணுக்கு என**
**உழுபடைகளைவகைப்படுத்தி உருவாக்கினர்."[4]**

அகுதை இனத்தினர் பலவகை உழுபடை களை பயன்படுத்தியதை இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. சங்ககாலத்திலேயே உழுபடைகள் வேளாண்மை கருவிகளுள் ஒன்றாக இடம்பெற்றுள்ளன.

**"ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து**
**ஓர் ஏர் உழவன் போல"[5]**

ஈர நிலம் காய்வதற்கு முன்பு உழமுயலும் ஓர் உழவன் பற்றிய இக்குறுந்தொகை பாடலில் உழுபடையின் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆவினத்தின் குறுக்கு ஆரம்

நிலத்தினை உழுபடைகளை கொண்டு உழுவதற்கு கால்நடைகளை பயன்படுத்துவர். மரத்தினால் குறுக்கு ஆரம் ஒன்றை செய்து அதனையும் உழுபடையையும் இணைத்து கால்நடைகளின் கழுத்தில் மாட்டி இழுக்கவைப்பர். வேள்பாரி புதினத்தில் இச்செயல்பாட்டிற்காக அகுதை இனத்தினர் அத்தி மரத்தில் குறுக்கு ஆரத்தை செய்ததாக கூறப்பட்டுள்ளது. அத்தி மரத்தில் குறுக்கு ஆரத்தினை செய்து பயன்படுத்தும்போது, கால்நடைகளின் கழுத்தில் வடு பிடிக்காது என்றும் அவர்கள் அறிந்துள்ளனர். கால்நடைகளை மரங்களோடு இணைத்து பொருத்திய அகுதை இனத்தினரின் மதிநுட்பத்தை இந்நிகழ்வு விவரிக்கிறது. வேள்பாரி புதினத்தில் அகுதை இனத்தினர் கால்நடைகளை பாதிக்காத வகையில் குறுக்கு ஆரத்தை பயன்படுத்தியதை போன்று, "பாரம் மாட்டின் கழுத்தை அழுத்தாதபடியான தொழில்நுட்பத்தோடு பண்டைத் தமிழர்கள் மாட்டு வண்டியின் அமைப்பை உருவாக்கியுள்ளனர்."[6] இவை பண்டைத் தமிழரின் உயிரிறக்கத்திற்கும், அறிவாற்றலுக்கும் சான்றுகளாக அமைந்துள்ளன.

### ஆவார இலையின் பயன்பாடு

இயல்பாக காடுகளில் வறண்ட நிலங்களில் என வளர்ந்திருக்கும் செடி வகைகளுள் ஒன்று ஆவாரம் செடியாகும். இது பல மருத்துவ பயன்பாடுகளை கொண்டது. "சங்க காலத்தில் மடல் மா ஏறி வரும்போது ஆவாரம் பூ பயன்படுத்தப்பட்டுள்ளது."[7] வேள்பாரி புதினத்தின் ஆவார செடியின் இலை அதிக விளைச்சலை பெறுவதற்காக அகுதை இனத்தினர் பயன்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. அகுதை இனத்தின் கிழவர் ஒருவர் ஆவார இலையை கண்டறிந்து அதனை நிலத்திலிட்டு புதைத்து விளைச்சலை அதிகப்படுத்தினார். இரண்டு விளைச்சலுக்கு பின்பு ஆவார இலையின் பயன்பாட்டை மற்ற அகுதை இனமக்களும் அறிந்து கொண்டனர். இதனை,

> **"ஆவார இலையை அடிமண்ணில் போட்ட போது அவர்கள்**
> **சொல்வதை யாரும் நம்பவில்லை."[8]**

இவ்வரிகள் குறிப்பிடுகின்றன.

"ஆவார இலை மனிதர்களுக்கு மருந்தாகவும், பயிர்களுக்கு உரமாகவும் பயன்படும்"[9] என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

### அகுதையின் குலப்பறவை - அசுணமா

வேள்பாரி புதினத்தில் அகுதை இனத்தினரின் குலப்பறவையாக அசுணமா என்ற பறவை கூறப்பட்டுள்ளது. இசைக்கு மயங்கும் இப்பறவை கொன்றை மரத்தில் மட்டுமே தங்குமென்றும், கொன்றை மர யாழினால் இசைக்கும்போது இசைப்பவனின் அருகில் சென்று மயங்கும் என்றும் வேள்பாரி புதினத்தில் கூறப்பட்டுள்ளது. அகுதையின் இனம் அழிந்த மறுநாள் அசுணமா பறவைகளும் தங்களை அழித்துக்கொண்டதாக புதினத்தில் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் அசுணமா குகைகளில் வாழும் தன்மையுடையதாகவும், இசையை உணர்ந்து மயங்கும் தன்மையுடையதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனை அகநானூற்றின்,

> **"இருஞ் சிறைத் தொழுதி ஆர்ப்ப, யாழ் செத்து,**
> **இருங் கல் விடர் அளை அசுணம் ஓர்க்கும்"[10]**

இப்பாடல் மூலம் அறியலாம். வேள்பாரி புதினத்தின் வாசகர்களில் ஒருவரான நந்தினி ஆறுமுகம் அசுணமா என்ற பெயரில் சிறுகதை தொகுப்பினை வெளியிட்டுள்ளார் என்பதும் காணத்தக்கதாகும்.

### சமநிலையின் சரிவு

பண்டைக் காலத்தில் போர் என்பது அறம் சார்ந்ததாகவும், தனக்கென சில நெறிமுறைகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது. ஆனால் வளமான பூமியை தனதாக்க வேண்டும் என்ற வேட்கை தோன்றிய பிறகு நெறிமுறைகளை பின்பற்றாது வெற்றி ஒன்றையே நோக்காக கொண்டு செயல்பட்ட இடங்களும் இருந்துள்ளன. தமிழின் முதல் இலக்கண நூலாகிய

தொல்காப்பியத்தில் பண்டைய போர் பற்றி பல கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. புறத்திணையியல் வழியாக இதனை அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் வஞ்சித் திணை,

***"வஞ்சி தானே முல்லையது புறனே***
***எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்***
***அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்ன"[11]***

அரசர்கள் மண்ணாசைக்காக போர் புரிந்ததை எடுத்துரைத்து, பண்டைய கால போர் மரபினை வெளிப்படுத்துகிறது. ஆனால் அகுதையும் அகுதையின் இனமும் போர் என்ற அறைக்கூவல் எதுவுமின்றி, பாண்டிய மன்னனால் அழைக்கப்பட்டதாக வேள்பாரி புதினத்தில் கூறப்பட்டுள்ளது. இந்நிகழ்வினை போன்று எதிர்பாராத தாக்குதலை மேற்கொள்ளும் போது வெற்றியை பெற முடியும் என பல தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றதாக புதினத்தில் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் அகுதையும், அகுதையின் கூடல்நகரும் பாண்டிய மன்னனால் அழிக்கப்பட்டதை,

***"மணநாறு மார்பின் மறப்போ ரகுதை***
***குண்டுநீர் வைப்பிற் கூடலன்ன"[12]***

புறநானூற்றின் இப்பாடல் குறிப்பிடுகிறது. ஆனால் அகுதையின் இனம் அழிக்கப்பட்டதாக சங்க இலக்கியத்தில் குறிப்புகள் எதுவும் இல்லை. வேள்பாரி புதினத்தில் இனங்கள் அழிந்த கதைக்கு மாறாக, "தமிழேழு வள்ளல்கள் காலமும் - வரலாறும்" என்ற நூலில்

***"ஓர் சமூகத்தையோ ஓர் குலத்தையும் முழுவதுமாக***
***அவர்கள் அழித்ததே இல்லை, ஏனென்றால் அதற்கு***
***நிறைய சான்றுகள் நம்மிடம் உள்ளன."[13]***

என்று குறிப்பட்டு, மூவேந்தர்கள் ஓர் இனத்தையும் முழுமையாக அழித்ததில்லை என்றே கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் வைகைக்கரையின் அருகிலுள்ள கூடல்நகர் வளமிக்கது என்றும் கூடல்நகரை ஆட்சி செய்பவன் அகுதை என்றும், கொற்கைப் பாண்டியன் என்னும் நெடுஞ்செழியனால் கூடல்நகர் கைப்பற்றப்பட்டது என்றும் பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அகுதை பற்றிய சங்க இலக்கிய குறிப்புகளை மையமாகக் கொண்டு, அவற்றோடு பல புனைவுகளையும் இணைத்து வேள்பாரி புதினம் அகுதை பற்றிய செய்திகளை எடுத்துரைத்துள்ளது. குறுநில மன்னர் சமுதாயமாகிய அகுதை இனம் வேந்தர் சமுதாயத்தால் அழிக்கப்பட்ட வரலாற்றையும், சங்ககால வேளாண்மை மற்றும் அசுணமா போன்ற சிறப்பான சங்க இலக்கிய தகவல்களையும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

## குறிப்புகள்


1. க. கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை, பக்.23.
2. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி, பாகம் - 1, பக்.146.
3. இரா. செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.வ. 237:13-14.
4. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி, பாகம் - 1, பக்.158.
5. புலியூர்க்கேசிகன் (உ.ஆ), குறுந்தொகை, பா.வ.131:4-5.
6. https://www.dinamani.com/weeklysupplements/dinamanikondattam/2021/oct/24/amazing-cow-vehicle-3723311.html"
7. https://isha.sadhguru.org/in/ta/blog/article/avaram-poo-benefits-in-tamil
8. சு. வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி, பாகம் - 1, பக்.158.
9. https://alltamiltips.com/%E0%AE%86%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%87%E0%AE%B2%E0%AF%88-%E0%AE%AA%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-avaram-leaf-benefits/

10. இரா. செயபால் (உ.ஆ), அகநானூறு, பா.வ. 88.
11. ச. திருஞானசம்பந்தம் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், நூற்பா எண்: 64.
12. கு. வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), புறநானூறு, பா.வ. 347:5-6.
13. சேரன் செங்குட்டுவன், தமிழேழு வள்ளல்கள் காலமும் வரலாறும், பக். 50.

## முதன்மை ஆதாரம்

1. வெங்கடேசன். சு, வீரயுக நாயகன் வேள்பாரி (இரண்டு பாகங்கள்), விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை. ஆறாம் பதிப்பு - ஜுன் 2021.

## துணைநூற்பட்டியல்

1. கிருஷ்ணமூர்த்தி. க, - வேளாண்மை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு - ஜனவரி 2020.
2. சேயபால். இரா, (உ.ஆ) - அகநானூறு மூலமும் உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, ஆறாம் பதிப்பு - அக்டோபர் 2017.
3. சேரன் செங்குட்டுவன், தமிழேழு வள்ளல்கள் காலமும் வரலாறும், புர்ப்பிள் புக் ஹவுஸ், டவுன் ஹால், கோயம்புத்தூர், முதற்பதிப்பு - ஜுன் 2022.
4. திருஞானசம்பந்தம். ச, (உ.ஆ) தொல்காப்பியம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு, முதற்பதிப்பு - மார்ச் 2018.
5. பாலசுப்பிரமணியன். கு. வெ, (உ.ஆ), புறநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, ஆறாம் பதிப்பு - அக்டோபர் 2017.
6. நாகராஜன். வி, (உ.ஆ), குறுந்தொகை: மூலமும் உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, ஆறாம் பதிப்பு - அக்டோபர் 2017.